**கெக்கிராவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெக்கிராவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கெக்கிராவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் நிறுவனமொன்று தயாரித்த பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் மிகையில் அல்லது (பற்றாக்குறையில்) | ஏற்றுக்கொள்கின்றோம். | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மீதி சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்படாத மூலதன செலவின மானியங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 140,620,280 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 207,724,902 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களின் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே ரூபா 55,106,734 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 05 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் NCP/LG/DE/04/04/2020 என்ற கடிதம் | சபையின் இயந்திர உபகரணங்களை கடன் அடிப்படையில் வாடகைக்கு வழங்காதிருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது சபையின் இயந்திரம் கடன் அடிப்படையில் கடன் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டமையால் ரூபா 3,488,150 நிலுவைத் தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதற்குரிய விரிவான பட்டோலை மற்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல நிலுவைப் பணத்தையும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 25,931,467 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 9,591,249 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,248,043 ஆன நிலுவை ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் சகல நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | சொத்துக்களை வாடகைக்கு வழங்கியதற்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 2,126,301 தொகை மற்றும் கடை வாடகை ரூபா 1,132,400 என்பன அறவிடப்பட்டிருக்க வில்லை. | உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளிலிருந்து பெறப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| (i) | 2021 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாமையால் ரூபா 272,000 வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலும் நிலுவையாகவுள்ள உள்ள அளவினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 நிறுவனங்களுக்குரிய நிலுவை அறிவித்தல் பதாதை வருமானம் ரூபா 170,000 அறவிட வேண்டிக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவை அறிவித்தல் பதாகை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,488,150 இயந்திர வாடகை நிலுவை மீதியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவையாகவுள்ள இயந்திர வாடகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 773,887 களியாட்ட வரியை அறவிடுவதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சேவையை கைவிட்டுச் சென்றதன் காரணமாக இரண்டு நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 334,410 ஆன இடர்கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | விரைவாக அந்த மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2,500,000 செலவினத்தில் எம்புல்கஸ்வெவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கழிவுப்பொருள் முகாமைத்துவ தளம் மற்றும் 04 உயிரியல் தாங்கிகள் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | உயிரியல் தாங்கியை பயன்படுத்துவதற்காக கவனத்தில் கொள்ளப்படுகின்றது. | இந்த சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான பெறுமதி ரூபா 8,751,000 ஆன 06 கட்டிடங்கள் சில வருடங்கள் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | உரிய கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்ட இலக்கம் NCP/BP/120 மற்றும் NCP/BP/122 இன் மூலம் ரூபா 7,934,927 நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்ட 02 செயற்திட்டங்களுக்கு முறையாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயற்திட்டங்களுக் குரிய வழங்கல் நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டு நிதியேற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் கிராமிய விதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 135,000,000 ஆன சிறு கொங்கிறீட் கல் பதிக்கும் 98 செயற்திட்டங்களில் 04 செயற்திட்டங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மிகுதி செயற்திட்டங்கள் தொடர் வேலையா அல்லது இரத்துச் செய்யப்பட்டதா என உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்த செயற்திட்டங்கள் தொடர் வேலையா அல்லது இரத்துச் செய்யப்பட்ட வேலையா என நிதியேற்பாடு வழங்கிய அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. | மிகுதி செயற்திட்டங்கள் தொடர் வேலையாக உள்ளமையும் இரத்துச் செய்யப் பட்டிருந்ததா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தலொ ன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 50,000 ஒதுக்கப்பட்டு செயல்நடவடிக்கைத் | ஏற்றுக்கொள்கின்றோம். கழிவுப்பொருள் தளத்தை முறையாக நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கழிவுப் | முறையாக கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளை அமுல்படுத்தல் |

திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 995 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே சபை அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற உக்கும் மற்றும் உக்காத கழிவுப்பொருட்கள் எம்புல்கஸ்வெவ பிரதேசத்தில் திறந்த இடமொன்றில் வகைப்படுத்தப்படாமல் கொண்டு போடப்பட்டிருந்ததுடன் அந்த இடத்திற்கு காட்டு யானைகளை உள்ளடக்கிய மிருகங்கள் தொடர்ச்சியாக வருவதனால் அவர்களின் உயிர்களுக்கும், சுற்றாடலுக்கும் பாதிப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வேண்டும்.